புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் குன்றாண்டார் கோவில் மத்திய ஒன்றியச் செயலாளர் குளவாய்ப்பட்டி சி.சண்முகம் சித்தப்பா எஸ்.ராஜ்குமார் தெத்துவாண்டார் மகன் ஆர்.பிரபாகரன், சி.ஹேமலதா ஆகியோர் திருமணம் கிள்ளுக்கோட்டையில் நடைபெற்றது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் மணமக்களை வாழ்த்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணைச் செயலாளர் க.மதியழகன், கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், புதுக்கோட்டை வடக்கு ஒன்றியச் செயலாளர் ஆர்.ஆர்.சாமிநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மு.கலைஞர் கருணாநிதி, கண்ணன், சின்னராஜ் ஆகியோர் உள்ளனர்.

கிராப்பட்டி செல்வம் ஏற்பாட்டில்

திருச்சியில் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் கே.என்.நேரு சிறப்புரை!

திருச்சி, ஜூலை 8-

திருச்சி மாநகரம் கிராப்பட்டி பகுதியில் மத்திய மாவட்டம் சார்பில் மாநில பொதுக்குழு உறுப்பினர், வட்ட செயலாளர் கிராப்பட்டி செல்வம் ஏற்பாட்டில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நூற்றாண்டு விழா பொதுக் கூட்டத்தில் தி.மு.க முதன்மை செயலாளரும் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு மற்றும் தி.மு.க அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கலந்து கொண்டனர்.

ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

இந்தக் கூட்டத்தில் ஆர்.எஸ்.பாரதி பேசுகையில்,

தி.மு.க. அரசை தமிழகத்திற்கு பெட்டி தூக்கிட்டு வந்தவன் குறை கூறினால் தி.மு.க. வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.

காமராஜர் மறையும் வரை அனைத்தையும் செய்து கொடுத்தது தி.மு.க.

காமராஜருக்கு சிலை வைத்த கட்சி தி.மு.க. தான் என்பதை மறந்து விடக்கூடாது, இது தற்போது உள்ள காங்கிரஸ்காரர்களுக்கு கூட தெரியாது. எவ்வளவு தைரியம் இருந்தால் அண்ணாமலை காமராஜர் பிரதமர் ஆவதை தி.மு.க. தடுத்தது என்று சொல்லலாம்.

காமராஜர் பிரதமர் பதவியை விரும்பவில்லை, நேருவின் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருத்தர் பிரதமராக வரவேண்டும் என அடையாளம் காட்டியவர் காமராஜர்.

1966 ஆம் ஆண்டு காமராஜர் வீட்டிற்கு டெல்லியில் ஜன சங்கத்தை சேர்ந்தவர்கள் தீ வைத்த போது அங்கு தி.மு.க. தொண்டன் கோதண்டபானி என்பவர் வீட்டுக்குள் சென்று காமராஜரை காப்பாற்றி உள்ளார்.

காமராஜர் இறந்த போது அவருக்கு அரசு மரியாதை செலுத்தி மணிமண்டபமும் கட்டியவர் கலைஞர்.

சென்னை உள்நாட்டு விமான நிலையத்திற்கு காமராஜர் பெயரை வைக்க வேண்டும் என வி.பி.சிங்கிடம் கலைஞர் கோரிக்கை வைத்தார் அதனை வி.பி.சிங் நிறைவேற்றி தந்தார்.

காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தவர் கலைஞர்.

செந்தில் பாலாஜி மீது போடப்பட்ட வழக்கு அயோக்கியத்தனமாக நடத்தப்படுகிறது. அவரை கைது செய்த போது மனித உரிமை மீறல் நடந்துள்ளது என்பதை நான் ஏற்கனவே கூறியிருந்தேன். நீதிமன்றம் நேற்று அதை உறுதி செய்துள்ளது.

அவருக்கு இதயத்தில் அடைப்பு ஏற்பட்டதால் அவர் உயிர் பிழைத்தார். இல்லையென்றால் அவர்கள் செய்த சித்திரவதையில் உயிரிழந்திருப்பார். அவருக்கு நாம் இரங்கல் தீர்மானம் தான் வாசித்திருக்க வேண்டி இருந்திருக்கும். அவர் தற்போது தப்பித்துள்ளார்.

மகாராஷ்டிராவில் 70 ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்ததாக அஜித் பவார் மீது வழக்கு உள்ளது. அவர் பா.ஜ.க விற்கு சென்ற உடன் ஆளுநருக்கு அங்கே இருக்கும் ஆளுநர் அவருக்கு துணை முதல்வராக பதவி பிரமாணம் செய்து வைத்துள்ளார். ஆனால் இங்கே உள்ள ஆளுநர் உயர் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்ட ஒரு வழக்கில் அமைச்சர் செந்தில் பாலாஜியை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

இந்தியாவில் என்ன நடக்கிறது என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும்.

செந்தில் பாலாஜி வழக்கில் இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளும் வெவ்வேறு தீர்ப்பு கூறினாலும் அவர்கள் இருவரும் அமலாக்கத் துறைக்கு கஷ்டடி கேட்க அதிகாரம் இல்லை என்பதை கூறி உள்ளார்கள். இதன் மூலம் அமலாக்கத் துறை செந்தில் பாலாஜியை அவர்கள் விசாரணைக்கு அழைக்க முடியாது என்பது உறுதியாகி உள்ளது.

தி.மு.க வை சட்ட ரீதியாக மோதியவர்கள் வெற்றி பெற்றதாக சரித்திரம் இல்லை. அது ஜெயலிதா தொடங்கி எடப்பாடி வரை நடந்துள்ளது.

எங்களிடம் மோதி ஒரு போதும் வெற்றி பெற முடியாது.

ஆளுநர் என்ன நிலைமைக்கு செல்ல போகிறார்கள் என்பது இன்னும் 10,15 நாட்களில் தெரியும்.

தி.மு.க தொண்டர்கள் கட்சிக்கு ஒரு சோதனை என்றால் பார்த்து கொண்டு அமைதியாக இருக்க மாட்டார்கள்.

முதலமைச்சர் பெங்களூர் சென்றால் தடுப்போம் என அண்ணாமலை கூறி உள்ளார். அண்ணாமலைக்கு துணிச்சல் இருந்தால் முதலமைச்சரை தடுத்து பார்க்கட்டும் என பேசினார்.

அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

அடுத்து கே.என்.நேரு பேசுகையில்,

அண்ணாமலை அவரின் இருப்பை காட்டிக்கொள்ள தான் பேசுகிறார். அவருக்கு நாங்கள் பதில் தருவதே இல்லை.

அண்ணாமலையை பற்றியும் நாம் பயப்பட வேண்டியதில்லை, அ.தி.மு.க.வை பற்றியும் நாம் பயப்பட வேண்டியதில்லை.

கலைஞர் திருச்சிக்கு வரும் பொழுதெல்லாம் திருச்சிக்கு புதிய திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார். அவர் வழியில் தற்போது முதலமைச்சரும் பல திட்டங்களை திருச்சிக்கு தந்து அது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அ.தி.மு.க வில் திருச்சி மாவட்டத்தில் இரண்டு அமைச்சர்கள் இருந்தார்கள். அவர்கள் எந்த திட்டத்தையும் செயல்படுத்தவில்லை.

செந்தில் பாலாஜி சிறை சென்று விட்டார் அடுத்து நேரு தான் என அ.தி.மு.க வினர் கூறுகிறார்கள். நாங்கள் சிறை செல்வது குறித்தெல்லாம் கவலைப்படுவதில்லை, அ.தி.மு.க வினரை போல் பயப்பட மாட்டோம். தி.மு.க.விற்காக அமைச்சராகவும் இருப்பேன், சிறைக்கு செல்ல தயாராகவும் இருப்பேன்.

தி.மு.க வின் தொண்டர்களை கூட மிரட்டி பார்க்க முடியாது என பேசினார்.

இந்த கூட்டத்தில் மாநகர செயலாளரும், மாநகராட்சி மேயருமான அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, சேலம் சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் பெரியசாமி, சேர்மன் துரைராஜ் மாமன்ற உறுப்பினர்கள் கவிதா செல்வம், போட்டோ கமால், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொது மக்கள் ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.

ஜார்கண்டில் - முஸ்லிம் வாலிபர் அடித்துக் கொலை!

மதவெறியர்கள் 10 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை!

ஜார்கண்ட் மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு!

ராஞ்சி, ஜூலை 8-

'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' எனக் கூறச் சொல்லி முஸ்லிம் வாலிபர் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில், குற்றவாளிகள் 10 பேருக்கு 10 ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்து ஜார்க்கண்ட் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலம் செரைகேலா கர்ஸ்வான் மாவட்டத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு ஜூன் 17 அன்று தப்ரேஸ் அன்சாரி என்ற வாலிபர், மதவெறிக் கும்பலால் கொடூரமான முறையில் அடித்துக் கொல்லப்பட்டார். 'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' என கூறுமாறு, பல மணி நேரமாக அவரை கட்டி வைத்து அடித்ததில், படுகாயம் அடைந்த தப்ரேஸ் அன்சாரி, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, 5 நாட்களுக்குப் பிறகு சிகிச்சை பலனின்றி இறந்து போனார். இந்த சம்பவம் அப்போது நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. நாடாளுமன்றத்திலும் இந்த விவகாரம் எதிர்க்கட்சிகளால் கிளப்பப்பட்டது.

அப்போது, மதவெறி காரணமாக தப்ரேஸ் கொல்லப்படவில்லை. பைக் திருட முயன்ற போதுதான் பொதுமக்களால் அடித்துக் கொல்லப்பட்டார் என்று இந்துத்துவா மதவெறியர்கள் கதைகளை பரப்பினர்.

ஆனால், 'ஜெய் ஸ்ரீராம், ஜெய் அனுமான்' கூறச் சொல்லியே தப்ரேஸ் அன்சாரி தாக்கப்பட்டார் என்பதற்கான வீடியோ ஆதாரங்கள் வெளியாகி உண்மையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தன. இந்நிலையில், தப்ரேஸ் அன்சாரி அடித்துக் கொல்லப்பட்ட வழக்கில் ஜார்க்கண்ட் மாவட்ட நீதிமன்ற நீதிபதி அமித் ஷேகர் புதனன்று தண்டனை விவரங்களை அறிவித்தார். அதில், குற்றம் சாட்டப்பட்ட 13 பேரில் ஒருவர் வழக்கு விசாரணையின்போதே இறந்து விட்ட நிலையில், 2 பேரை விடுதலை செய்தும், எஞ்சிய 10 பேருக்கு தலா 10 ஆண்டு கடுங்காவல் சிறைத் தண்டனையும், தலா ரூ. 15 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தளவாய்ப்பட்டி, உட்பட 7 ஊராட்சிகளில், முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் தார்சாலையாக ரூ.3 கோடியே 46 லட்சம் செலவில் அமைக்கும் பணியை தளவாய்ப்பட்டியில் சேலம் வடக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், மாவட்டக் கழகச் செயலாளருமான இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சேலம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர். மலர்கொடிராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர். ரெயின்போ நடராஜன், தளவாய்ப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் கே.ராஜா, பொதுக் குழு உறுப்பினர் ஏ.ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர் கீதா குணசேகரன், ஒன்றிய கவுன்சிலர் அமுதா கோவிந்தன் உட்பட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

திருச்சி உறையூர் லிங்கா நகர் பகுதியில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று கூட்டுறவுத் துறையின் புதிய நியாய விலைக் கடையினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநகர மேயர் அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, கோட்டத் தலைவர் விஜயலட்சுமி கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் இளங்கோ நாகராஜ், பங்கஜம் மதிவாணன், விஜயா ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் ஹரி, தனபால், முத்து, பழனி, திருநாவுக்கரசு, தர்மசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - பி.கே.சேகர்பாபு மற்றும் நே.சிற்றரசு எம்.சி. பங்கேற்பு!

சென்னை மேற்கு மாவட்டம் சார்பில் மாபெரும் மின்னொளி கால்பந்தாட்டப் போட்டி!

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இன்று துவக்கி வைக்கிறார்! தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜூலை 8-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மற்றும் சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க இணைந்து நடத்தும் 32 கல்லூரி மாணவ, மாணவியர் பங்கேற்கும் மாபெரும் மின்னொளி கால்பந்தாட்ட போட்டி இன்று (ஜூலை 8) தொடங்கி நாளையும் (9 ஆம் தேதி) சென்னை ராயப்பேட்டையில் அமைந்துள்ள புதுக்கல்லூரி மைதானத்தில் நடக்கவிருக்கிறது.

இதன் துவக்க விழா நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கின்றது. இப்போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்து, விழா பேருரையாற்ற விருக்கின்றார்.

இவ்விழாவிற்கு கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் தலைமை வகிக்கிறார். மாவட்ட கழகத்தின் செயலாளரும், பெருநகர மாநகராட்சி பணிகள் நிலைக்குழுவின் தலைவருமான நே.சிற்றரசு முன்னிலை வகிக்கின்றார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை, சென்னை பெருநகர மேம்பாட்டு குழுமத்தின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றார்கள்.

இவ்விழாவில் மயிலை சட்டமன்ற உறுப்பினரும், சென்னை தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாருமான த.வேலு, அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர். நா.எழிலன், சேப்பாக்கம் பகுதிக் கழக செயலாளரும், மண்டல குழு தலைவருமான எஸ்.மதன்மோகன், திருவல்லிக்கேணி பகுதி கழகச் செயலாளரும், சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத்தலைவருமான ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், கழக சிறுபான்மை நலப்பிரிவின் தலைவர் டாக்டர். சுபேர்கான், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஈஸ்வரி வெங்கடேசன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநில துணை செயலாளர்கள் கௌதம் சிகாமணி, எம்.பி. எஸ்.ஆர். பார்த்திபன், எம்.பி. ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., வே.நம்பி, பைந்தமிழ் பாரி, சுரேஷ் ஜெ. மனோகர், வாசிம் முபாரக், செல்வி. நிவேதா ஜெசிகா, எஸ்.கார்த்திக் மற்றும் வே.கௌதமன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

இந்நிகழ்வில் விளையாட்டு மேம்பாட்டு அணியின் மாநிலத் துணை செயலாளர் ஏ.ஆர்.வி. கோபால்ராம் வரவேற்புரையாற்றுகின்றார். வட்டக் கழகத்தின் செயலாளர் ஜி.வெங்கடேசன் நன்றியுரையாற்றுகின்றார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

மாவட்டச் செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, ஜூலை 8-

கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ் ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்திலுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளிலும், 2023ம் ஆண்டு சிறப்பு சுருக்க முறை வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணி வாக்குச்சாவடி நிலை அலுவலரால் வீட்டுக்கு வீடு சரிபார்ப்பு பணிகள் 21.07.2023 வெள்ளி முதல் 21.08.2023 திங்கள் வரை நடைபெறவுள்ளது.

புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2024ன் போது கோரிக்கை மற்றும் மறுப்புரைகள் அளிக்க அனுமதிக்கப்பட்ட 17.10.2023 முதல் 30.11.2023 வரை உள்ள காலத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம் செய்யவோ / திருத்தங்கள் செய்யவோ / இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர் / தகுதியுள்ள குடிமக்கள், படிவங்கள் 6, 6பி, 7 அல்லது 8 ஆகியவற்றைப் பூர்த்தி செய்து கீழ்க்கண்டவாறு அளிக்கலாம்.

• அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலரிடம் / வாக்காளர் பதிவு அதிகாரி / உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகங்களில் அளிக்கலாம்.

• சிறப்பு முகாம் நாட்களில் அந்தந்த வாக்குச்சாவடி அமைவிடங்களில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்கலாம்.

•அலுவலக வேலை நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்களிடம் அளிக்கலாம்.

•பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன், வசிப்பிட முகவரி மற்றும் வயது ஆகியவற்றுக்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். முகவரிச் சான்றாக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலை அளிக்கலாம்.

•முகவரிக்கான நீர்/மின் சாரம்/எரிவாயு இணைப்பு ரசீது (குறைந்தது 1 வருடத்திற்காவது)

• ஆதார் அட்டை

• தேசியமயமாக்கப்பட்ட / அட்டைவணைப் படுத்தப்பட்ட வங்கி / அஞ்சல் அலுவலகத்தின் தற்போதைய கணக்கு புத்தகம்.

• கடவுச் சீட்டு

• விவசாயி புத்தகம் உட்பட வருவாய்த் துறைகளின் நில உரிமைப் பதிவுகள்.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024, 01.04.2024, 01.07.2024 மற்றும் 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தி யடைந்தவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும், பெயர் சேர்க்க படிவம் 6ல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர்கள் படிவத்தில் உள்ள உறுதிமொழியினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் வாக்காளரின் புகைப்படங்களின் தரத்தை மேம்படுத்தும் விதமாக விண்ணப்பதாரர்கள் 200 dpi resolution கொண்ட புகைப்படங்களை அளிக்க / தரமேற்ற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடந்த ஜமாபந்தி நிறைவு விழா நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்துகொண்டு நரிக்குறவர் இன மக்களுக்கு பழங்குடியினர் சான்றுகளை வழங்கினார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி, கூடுதல் ஆட்சியர் சித்திரா விஜயன், ஆட்சியர் கட்டாரவி தேஜா, மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், துணை சேர்மன் பழனி, பேரூராட்சி மன்றத் தலைவர் வேதநாயகி ஆளவந்தார் ஆகியோர் உள்ளனர்.